**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**
**OS . No. 166/2017**

**16.04.2024**

**வா.சா.1 இராமமிர்தம் க /பெ. செல்லத்துரை அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி:**

எனது தாயார் இறந்ததற்கான இறப்பு சான்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கோவிந்தம்மாள் , வீரப்பன், லட்சுமி , சுப்பையா, ஆறுமுகம், முத்தம்மாள் , கண்ணம்மாள் ஆகியோர் இறந்ததற்கான இறப்பு சான்று மற்றும் அவர்களின் வாரிசு சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பிறந்ததிலிருந்தே தாவா சொத்தை அனுபவித்துவருகிறார். எனக்கு திருமணம் நடந்து சுமார் 40 வருடம் ஆகியுள்ளது. எனக்கு திருமணம் நடைபெற்றதிலிருந்தே அஷேசம் நகரில் தாவா சொத்தின் சுமார் 500 மீ தொலைவில் தான் வசித்து வருகிறேன். எனது தாயார் இறந்து சுமார் 60 வருடங்கள் இருக்கும் எனது தந்தை 1970 ம் வருடம் இறந்தார். கண்ணம்மாள்ளுக்கு லோகநாயகி , சக்திவேல், சரவணன் ஆகியோர் வாரிசுகள் ஆவார்கள். ஆறுமுகத்தின் முதல் மனைவி பெயர் இராசம்மாள் என்றால் சரிதான். இராசம்மாள் வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் இறந்துவிட்டார் என்பதற்கு இறப்பு சான்று தாக்கல் செய்யவில்லை. இராசம்மாள் அவர்களை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்காததற்கு எவ்வித காரணங்களும் இல்லை. சுமார் 50 வருட காலங்களாக 1ம் பிரதிவாதி இராஜகோபால் எனக்கு தெரிந்தே தான் அனுபவம் செய்துவருகிறார். எனக்கு எழுதப்படிக்க தெரியாது. அதனால் என்னால் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் குறித்து சொல்ல முடியாது. இராஜகோபால் என்பவர் இரவிச்சந்திரனுக்கு எழுதிகொடுத்ததாக சொல்லப்படும் உயில் குறித்து என்னால் சொல்ல இயலாது. 3ம் பிரதிவாதியான இரவிச்சந்திரன் 14 ம் பிரதிவாதி பெரியசாமிக்கு எழுதிகொடுத்த கிரயம் ஆவணம் பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்து ஒரு மாதத்தில் இரவிச்சந்திரன் பெரியசாமிக்கு கிரய ஆவணம் எழுதிக்கொடுத்ததை பற்றி தெரிந்துகொண்டேன். பெரியசாமி என்பவருக்கு எழுதிகொடுத்த விபரம் முன்பே தெரியும் என்றும் அதை மறைத்து நான் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்துகள் எல்லாம் 1ம் பிரதிவாதி இராஜகோபால் என்பவருக்கு வாய்மொழியாக அவர் தாயார் கொடுத்துவிட்டார் என்றும் அதனால் தான் நான் எவ்வித இடையூறும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது பெற்றோர்கள் இறந்த பிறகு பட்டாவை கூட்டுப்பட்டாவாக மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை. தாவா சொத்துகள் அனைத்தும் 1ம் பிரதிவாதியின் தாயாரால் அவருக்கு கொடுக்கப்பட்டு அவர் 3ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண் மூலமாக கொடுக்கப்பட்டு அதன்பிறகு அவர் 14 ம்பிரதிவாதி கிரயம் பெற்றுள்ளார்

என்றும் அதனால் எனக்கு பாகவீதம் எதுவும் கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. எனது பெற்றோர் இறந்தபிறகு நான் தாவா சொத்தை அனுபவிக்கவில்லை என்றும் அதன் அருகில் தான் திருமணமாகி குடியிருக்கிறேன் என்றால் சரியல்ல. 14 ம் பிரதிவாதியால் கிரயம் பெற்ற கிரய ஆவணம் செல்லும்தன்மை குறித்து எவ்வித பரிகாரமும் கேட்கவில்லை. இராசம்மாள் மற்றும் அவர்களின் வாரிசுகளை இந்த வழக்கில் தரப்பினார்களாக சேர்க்காததால் உரிய தரப்பினர்களை சேர்காததால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் பிரதிவாதிகள் மட்டுமே இறந்த நபர்களின் வாரிசுகள் என்று காட்டுவதற்கு வாரிசு சான்றுகள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் குறைபாடுடையது என்று சொன்னால் சரியல்ல. அதனால் இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்றால் சரியல்ல.

**(14 ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை அடுத்த வாய்தாவிற்கு ஒத்தி வைக்கப்படுகிறது)**

Sd/- திருமதி. இராமமிர்தம்

Sd/- திரு. கே. சக்திவேல்,
சார்பு நீதிபதி, மன்னார்குடி.